**2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலுக்கான உரிமை சட்டத்தின் பிரிவு 9(1)(அ)வின் பிரகாரம் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள்**

- *ஐக்கிய அமெரிக்க டொலர் 100,000/- இற்கும் (வெளிநாட்டு நிதியிடப்பட்ட கருத்திட்டங்களுக்கு) இலங்கை ரூபா 500,000/- இற்கும் (உள்நாட்டில் நிதியிடப்பட்ட கருத்திடங்களுக்கு) மேற்பட்ட பெறுமதியான ''கருத்திட்டங்கள்'' தொடர்பாக மட்டுமே 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலுக்கான உரிமை சட்டத்தின் பிரிவு 9இன் கீழ் தொடர்பாடல்கள் தேவைப்படுத்தப்படுகின்றன.*

- *இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் ஏனைய சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவித்தலுக்கும் வெளிப்படுத்தலுக்கும் மேலதிகமானவையாகும்.*

- *பிரிவு 9இன் நோக்கத்துக்காக ''கருத்திட்டங்கள்'' என்னும் பதம் கொள்வனவுக் குழுக்களினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லா மூலதனச் செலவினங்கள், அல்லது எல்லா கொள்வனவுச் செயற்பாடுகளையும் உள்ளடக்கும்.*

- *2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலுக்கான உரிமை கட்டத்தின் பிரிவு 9இன் கீழ் விதித்துரைக்கப்பட்டவாறாக உத்தேச கருத்திட்டம் ஒன்றின் முன்னறிவித்தல் அத்தகைய கருத்திட்டம் ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன்னர் வழங்கப்படல் வேண்டும் என்பதை ஒரு விதியாக கவனத்தில் கொள்ளவும். அவசர கருத்திட்டம் ஒன்றைப் பொறுத்தவரை, விதிவிலக்கான சூழ்நிலைகளின் கீழ் மாத்திரம் அத்தகைய கருத்திட்டம் பற்றிய ஒரு வார கால முன்னறிவித்தலை ஓர் அமைச்சர் வழங்கலாம். எனினும், அவசர கருத்திட்டங்களில் கூட, அமைச்சர் பின்வருவனவற்றை தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவுக்கு எழுத்தில் தெரிவித்தல் வேண்டும்:*

  அ) *உத்தேச கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அவசரத் தன்மையின் காரணங்கள்:*
  ஆ) *மேலே சொல்லப்பட்ட காரணங்களை நியாயப்படுத்தும் சான்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.*

- *ஓர் உத்தேச கருத்திட்டம் தொடர்பான பின்வரும் தகவல்களை பொதுமக்களுக்கு பொதுவாக பின்வரும் ஊடகங்கள் மூலமும் அத்தகைய கருத்திட்டத்தினால் பாதிக்கப்படக்கூடிய எவரேனும் குறித்த ஆட்களுக்கும் வெளிப்படுத்தல் வேண்டும்.*

  அ) *அமைச்சின் வலைத்தளத்தில் டிஜிட்டல் இலத்திரனியல் வடிவில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளிலும், சாத்தியமாயின் ஆங்கில மொழியிலும்; அத்துடன்,*
  ஆ) *மேலதிகமாக, குறித்த இடங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள உத்தேச கருத்திட்டங்களைப் பொறுத்தவரை, இத்துடன் பின்னிணைப்பு 1இல் விதித்துரைக்கப்பட்ட தகவல்களை வெளியிட்டு பொதுமக்களுக்குப்*

*புலப்படக்கூடிய இடங்களில் விளம்பரப் பலகைகள் காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன்,*

*இ) இணைய அணுகுதல் உடனடியாகக் கிடைக்காத பிரதேசங்கள் மற்றும் குடியேற்றங்கள் தொடர்பாக கருத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலில் சிக்கல்கள் காணப்படின், இங்கு பின்னிணைப்பு 1இல் தரப்பட்டுள்ள தகவல்கள் கிராம சேவை அலுவலர்கள், பிரதேச செயலகம் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகள் ஊடாக நடைமுறையில் சாத்தியமான அளவு அத்தகைய பிரதேசங்களின் குடியிருப்பாளர்களுக்கு பரப்பப்படுதல் வேண்டும், அத்துடன்*

*ஈ) அமைச்சர் தகுந்ததெனக் கருதும் வேறு ஏதேனும் விதத்திலும் ஊடகங்கள் ஊடாகவும்.*

- *தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்டவையாக இருத்தல் வேண்டும். ஏதேனும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படின் முடியுமானவரை விரைவில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.*

**உத்தேசக் கருத்திட்டம் தொடர்பாக 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலுக்கான உரிமை சட்டத்தின் பிரிவு 9இன் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்**

**திகதி: ……………………….**

**அமைச்சு / திணைக்களம் / நிறுவனம்: ……………………………………………………………**

**நடைமுறைப்படுத்தும் முகவர் நிலையம்: …………………………………………………………….**

**அ. உத்தேசக் கருத்திட்டம் பற்றிய விபரங்கள்**

**1. உத்தேச கருத்திட்டத்தின் விவரணம்:**

**2. கருத்திட்டத்தின் அமைவிடம் (மாகாணம், மாவட்டம், பிரிவு, இடம் ஆகியவற்றின் அடிப்படையில் கருத்திட்டச் செயற்பாடுகள் நடைபெறும் அமைவிடத்தை (இடங்களைக்) குறிப்பிடுக – எல்லைகளை தெளிவாக நிர்ணயிக்க முடியாவிடின் மேலதிக விவரணங்களை வழங்கவும்):**

**3. கருத்திட்டம் ஆரம்பிக்கும் உத்தேசத் திகதி:**

**4. கருத்திட்டத்தை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி:**

**ஆ. கருத்திட்டத்தின் அடிப்படைக் கோட்பாடு [கருத்திட்டத்துக்கான அபிவிருத்தி விளைவுகளுக்கான முகாமைத்துவ (MfDR) சட்டகம் வகுக்கப்பட்டிருப்பின், அதனைக் குறிப்பிடுக]**

**5. கருத்திட்டத்தின் குறிக்கோள்கள்/ இலக்குகள்:**

6. எதிர்பார்க்கப்பட்ட கருத்திட்ட வெளிப்பாடுகள் / பயன்கள்:

7. இலக்குக்கு உட்பட்ட பயனாளிகள் /பங்கீடுபாடு உடையோர்:

8. **உத்தேசக் கருத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் காரணமாக எவரேனும் பிரசைக்கு பாதிப்பு உள்ளாகும் சாத்தியம் உள்ளதா?** (உதாரணமாக, கருத்திட்டத்துக்கு தனியார் ஆதனங்களை சுவீகரித்தல், சீவனோபாயம் பாதிப்புக்கு உள்ளாகக்கூடியவர்கள், எவரேனும் ஆளின் ஏதேனும் உரிமைகள் பாதிக்கப்படுதல்)? – **ஆம் / இல்லை**

9. **ஆம் எனில், அவர்களுக்கு போதிய முன்னறிவித்தல் வழங்கப்பட்டதா? அத்துடன் / அல்லது கருத்திட்டம் தொடர்பாக அவர்களிடம் கலந்தாராயப்பட்டதா? – ஆம் / இல்லை**

10. **இல்லை எனில், அத்தகைய தவிர்ப்புக்கான காரணங்களை விளக்குக.**

11. **பொருத்தமானவிடத்து, பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு, எவரேனும் இருப்பின், நட்டஈடு / இழப்பீடு வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட விபரங்களையும் / விவரணங்களையும் நட்டஈட்டுக்கான விண்ணப்பங்களை நடைமுறைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பான நிறுவனத்தின் விபரங்களையும் வழங்குக.**

12. நியாயப்படுத்தல் (அதாவது, நிதிக் கிரயப் பயன், சமூகக் கிரயப் பயன் போன்றவை):

இ. கருத்திட்டத்தின் வரவு செலவுத் திட்டமும் நிதியியல் தகவல்களும்

13. கருத்திட்டத்தின் மொத்த உத்தேச செலவினம்:

14. பொருத்தமானவிடத்து கணியப்பட்டியல் **(BOQ):**

15. ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகைகள் [செலுத்த வேண்டிய நாணயத்திலும் அவ்வாறே சமனான இலங்கை ரூபாவிலும் கூறுக.]

16. நிதி மூலம் (வெளிநாட்டு / உள்நாட்டு / ஏனையவை – உதாரணமாக, பொது தனியார் பங்குடைமை) – கருத்திட்டத்துக்கு நிதியளிப்பதில் சம்பந்தப்பட்டுள்ள வெளிநாட்டு அல்லது உள்நாட்டு அமைப்புகளை / நிறுவனங்களை அடையாளம் காண்க.

17. உத்தேச கருத்திட்டம் பொது, தனியார் பங்குடைமை அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாயின், அரசாங்கத்தின் அதிகாரமளிப்பின் கீழ் தனியார் துறை தரப்பினர்களால் பெறப்படக்கூடிய உரிமை முதல் மற்றும் இலாபப் பங்குகளின் அடிப்படை, கட்டணங்கள், தீர்வைகள் அல்லது ஏனைய வகையான வருமானம் போன்ற

நிதித் தகவல்களின் விபரங்களை உள்ளிட்ட அரசாங்கத்துக்கும் தனியார் துறை தரப்புக்கும் இடையிலான உடன்படிக்கையின் பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகளை வழங்குக.

18. உத்தேசக் கருத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலில் இலங்கை அரசின் / அரசாங்கத்தின் கிரயத்தில் / செலவில் ஒப்பந்ததாரருக்கு அல்லது தனியார் தரப்பினருக்கு வழங்கப்படும் எல்லா மேலதிகப் பயன்களை / சலுகைகளை, ஏதேனும் இருப்பின், பட்டியலிடுக. உதாரணமாக, வரி விடுவிப்புகள், வரிச் சலுகைகள், சலுகை வீதத்தில் / விலைகளில் காணியை விற்றல் / குத்தகைக்கு வழங்குதல் போன்றவை.

ஈ. அவசியமான விடுவிப்புகள்

19. தேசிய திட்டமிடல் திணைக்களத்திலிருந்து / பொருளாதார அபிவிருத்திக் குழுவிலிருந்து / அமைச்சரவையிலிருந்து / முதலீட்டுச் சபையிலிருந்து / மாகாண சபையிலிருந்து / உள்ளூராட்சி அதிகாரசபையிலிருந்து / சம்பந்தப்பட்ட அதிகார சபையிடமிருந்து, ஏற்புடையவாறு, உத்தேச கருத்திட்டத்துக்கான அங்கீகாரம் கிடைத்த திகதியைக் குறிப்பிடுக.

20. பொருத்தமானவிடத்து, பின்வருவன மேற்கொள்ளப்பட்டனவா?

அ) விலைமனு மதிப்பீடுகள்? ஆம் / இல்லை

ஆ) செயல் சாத்திய ஆய்வு? ஆம் / இல்லை

இ) தொழில்நுட்ப மதிப்பீடு? ஆம் / இல்லை

ஈ) நிதியியல் மதிப்பீடுகள்? ஆம் / இல்லை

மேலே சொல்லப்பட்ட அறிக்கைகளின், குறிப்பாக கொள்வனவுக் குழு அறிக்கைகள், விலைமனு மதிப்பீட்டுக் குழு அறிக்கைகள், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கைகள், ஆகியவற்றின், ஏதேனும் இருப்பின், திகதிகளைக் குறிப்பிடுக:

21. பௌதீக, உயிரியல், சமூக-கலாசார அல்லது அழகியல் நிலைமையின் மீதான சுற்றாடல் தாக்கங்களை, ஏதேனும் இருப்பின், விபரிக்க.

22. பொருத்தமானவிடத்து, சுற்றாடல் தாக்க மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதா? ஆம் / இல்லை

23. ஆம் எனில், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை மேற்கொண்ட நிறுவனம் / அமைப்பு பற்றிய விபரங்களையும் அறிக்கையின் (அறிக்கைகளின்) திகதியையும் (திகதிகளையும்) வழங்குக.

24. இல்லை எனில், தவிர்ப்புக்கான காரணத்தைத் தருக.

25. பொருத்தமானவிடத்து, தொடர்பான ஒழுங்குபடுத்தும் முகவர் நிலையத்தின் அங்கீகாரம் பெறப்பட்டதா? – ஆம் / இல்லை

26. ஆம் எனில், எந்த முகவர் நிலையம் என்பதையும் அத்தகைய அங்கீகாரம் அளிக்கப்பட்ட திகதியையும் குறிப்பிடுக.

27. கிடைக்கவேண்டியுள்ள அங்கீகாரங்கள் யாவை?

உ) வழங்குனர் / வியாபாரி / ஒப்பந்ததாரர்

28. கருத்திட்டம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதா **(solicited)** அல்லது வேண்டுகோள் விடுக்கப்படாததா **(unsolicited)**?

29. வேண்டுகோள் விடுக்கப்படாததாயின், கருத்திட்ட முன்மொழிவாளர், கருத்திட்ட முன்மொழிவு மற்றும் அத்தகைய முன்மொழிவு மேற்கொள்ளப்பட்ட திகதி:

30. வேண்டுகோள் விடுக்கப்படாத கருத்திட்டங்களுக்கு புற நிதியிடப்பட்டிருப்பின்,
   - **30.1** நிதியளிப்பவரின் பெயர்?
   - **30.2** நிதியிடலுக்கான நிபந்தனைகள்?

31. கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வழங்குனர் / வியாபாரி / ஒப்பந்ததாரர் பற்றிய விபரங்களைத் தருக:

32. ஒப்பந்தம் வழங்கப்பட்டதா?

33. ஆம் எனில், ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட திகதி?

34. இல்லை எனில், ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான உத்தேசத் திகதி?

35. கருத்திட்டத்துக்கான விலைமனுதாரர்களின் எண்ணிக்கையையும் அவ்வாறே விலைமனு சமர்ப்பித்தவர்களின் பெயர்களை / தொடர்புகொள்வதற்கான விபரங்களைத் தருக.

36. மேலே சொல்லப்பட்ட எல்லாம் தொடர்பாக, பொதுமக்கள் அணுகக்கூடிய ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாய நியமங்கள் மற்றும் வெளிப்படைத்தன்மைக்கு அமைவான ஏதேனும் முறைப்பாடுகளைக் கையாளும் பொறிமுறை உள்ளதா என்பதைக் குறிப்பிடுக.

37. உத்தேச கருத்திட்டத்துக்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்கவேண்டிய நிறுவனத்தை / முகவர் நிலையத்தை, ஏதேனும் இருப்பின், அதனைக் குறிப்பிட்டு, அத்தகைய ஆட்சேபனைகளைத் தெரிவிப்பதற்காக விதித்துரைக்கப்பட்ட காலக்கெடுவையும் தருக.

ஏதேனும் மேலதிக விசாரணைகளும் தெளிவுபடுத்தல்களும் யாருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்? ……………………… ……………………….
(கருத்திட்டம் பற்றி பொதுமக்களுக்கு தகவல் வழங்குவதற்குப் பொறுப்பான அலுவலரின் பதவி): தொலைபேசி / மின்னஞ்சல் ………………………………..

## பின்னிணைப்பு 1

கருத்திட்ட அமைவிடத்தில் விளம்பரப் பலகையில் வெளியிட வேண்டிய தகவல்கள்

திகதி: …………………….

அமைச்சு / திணைக்களம் / நிறுவனம்: ………………………………………………………………

நடைமுறைப்படுத்தும் முகவர் நிலையம்: ……………………………………………………….

- உத்தேச கருத்திட்டம் பற்றிய விபரம்:
- கருத்திட்டத்தின் அமைவிடம் (மாகாணம், மாவட்டம், பிரிவு, இடம் ஆகியவற்றின் அடிப்படையில் கருத்திட்டச் செயற்பாடுகள் நடைபெறும் அமைவிடத்தை (இடங்களைக்) குறிப்பிடுக – எல்லைகளை தெளிவாக நிர்ணயிக்க முடியாவிடின் மேலதிக விவரணங்களை வழங்கவும்):
- கருத்திட்டம் ஆரம்பிக்கும் உத்தேசத் திகதி:
- கருத்திட்டத்தை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி:
- கருத்திட்டத்தின் குறிக்கோள்கள் / இலக்குகள்:
- எதிர்பார்க்கப்பட்ட கருத்திட்ட வெளிப்பாடு / பயன்கள்:
- நட்டஈட்டுக்கான விண்ணப்பங்களை நடைமுறைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பான நிறுவனத்தின் விபரங்களையும், ஏதேனும் இருப்பின், வழங்குக.
- கருத்திட்டத்தின் மொத்த உத்தேச செலவினம்:
- ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகைகள் [செலுத்த வேண்டிய நாணயத்திலும் அவ்வாறே சமனான இலங்கை ரூபாவிலும் கூறுக.]
- நிதி மூலம் (வெளிநாட்டு / உள்நாட்டு / ஏனையவை – உதாரணமாக, பொது - தனியார் பங்குடைமை) – கருத்திட்டத்துக்கு நிதியளிப்பதில் சம்பந்தப்பட்டுள்ள வெளிநாட்டு அல்லது உள்நாட்டு அமைப்புகளை / நிறுவனங்களை அடையாளம் காண்க.
- கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வழங்குனர் / வியாபாரி / ஒப்பந்ததாரர் பற்றிய விபரங்களைத் தருக:

- உத்தேச கருத்திட்டத்துக்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்கவேண்டிய நிறுவனத்தை / முகவர் நிலையத்தை, ஏதேனும் இருப்பின், அதனைக் குறிப்பிட்டு, அத்தகைய ஆட்சேபனைகளைத் தெரிவிப்பதற்காக விதித்துரைக்கப்பட்ட காலக்கெடுவையும் தருக.

  ஏதேனும் மேலதிக விசாரணைகளும் தெளிவுபடுத்தல்களும் யாருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்? ……………………… ……………………….
  (கருத்திட்டம் பற்றி பொதுமக்களுக்கு தகவல் வழங்குவதற்குப் பொறுப்பான அலுவலரின் பதவி): தொலைபேசி / மின்னஞ்சல் ………………………………..

  *கருத்திட்டத்தின்போது, வழங்கப்பட்ட தகவல்களில் ஏதேனும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து, அத்தகைய மாற்றங்களை செம்மையாகப் பிரதிபலிக்கக்கூடியவாறு அமைச்சர் அமைவிடத்தில் உள்ள விளம்பரப் பலகையை அல்லது அறிவித்தல் பலகையை இற்றைப்படுத்துதல் வேண்டும்.